மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு. M. ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., LLM.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் நாள் வியாழக்கிழமை
இடைக்கால மனுஎண். 11/2026 ல் அசல் வழக்கு எண்.94/2020
**CNR.No.TNTT-08-000111-2020**

1.மு.கோமதி(இறப்பு)
2.மு.பேச்சியம்மாள்
3.மு.சரஸ்வதி
4.மு.காசிவிஸ்வநாதன்
5.மு.கணேசன்
6.ம.இசக்கிராணி
7.கோமதி(எ)சந்தியா ... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

1.த.பட்டாணி
2.ச.பட்டாணி
3.க.ஞானமணி ... 1, 2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
4.முருகம்மாள் ... 4ம் எதிர்மனுதாரர்/புதிதாக கட்சி சேர்க்கப்பட வேண்டியவர்

இம்மனுவானது இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.மாரியப்பன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினராகியும், 2, 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.விஸ்வநாதன் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி.முத்துராதா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாத உரைகளை கேட்டறிந்தும், மனு சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று (11.06.2026)இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

அசல் வழக்கில் 4ம் எதிர்மனுதாரரை 4ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டி



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.11 19:02:06 +0530

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.மனு சுருக்கம்.**

அ)அசல் வழக்கில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம், தபசில் சொத்தினைப் பொறுத்து ஏற்பட்டுள்ள கிரைய ஆவணங்கள் செல்லாது மற்றும் இல்லா நிலையது என்ற பரிகாரங்கள் கோரப்பட்டுள்ளது. அசல் வழக்கானது மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரர் தரப்பு வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யும் போது மனுதாரர்கள் கூறியுள்ள துரைராஜ் என்பவரை தரப்பினராக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று கேள்வி எழுப்பப்பட்டது.

ஆ)1ம் எதிர்மனுதாரரின் சகோதரரான மேற்படி துரைராஜ் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து 3ம் எதிர்மனுதாரருக்கு 23.01.2014ம் தேதி தபசில் சொத்தினை கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி ஆவணம் செல்லாது மற்றும் இல்லா நிலையது என்ற விளம்புகைப் பரிகாரம் கோரியுள்ள நிலையில் மேற்படி துரைராஜை தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும். ஆனால், வழக்குரை தாக்கல் செய்யும் காலத்தில் தரப்பினராக சேர்க்காமல் விடுபட்டுவிட்டது. அது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமான தவறுதல் ஆகும். வழக்கிடைக் காலத்தில் துரைராஜ் 29.03.2023ம் தேதி இறந்துவிட்டார். துரைராஜின் மனைவியான 4ம் எதிர்மனுதாரர் வாரிசு நிலையில் தாவா வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்பதால் அவரை 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 2, 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை சுருக்கம்**

மனு சங்கதிகள் குறிப்பிடப்பட்டு உண்மையல்ல என்று மறுக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் துரைராஜின் மகன் கணேசன் என்பவரை இவ்வழக்கில் கட்சி சேர்க்காமல் தாக்கல் செய்துள்ளதால் தேவையான தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் இம்மனு பாதிக்கப்பட்டுள்ளது. வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும்.



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.11 19:02:09 +0530

**4. 4ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்**

மனு சங்கதிகள் குறிப்பிடப்பட்டு உண்மையல்ல என்று மறுக்கப்பட்டுள்ளது. இறந்துபோன துரைராஜ்–க்கு 4ம் எதிர்மனுதாரரும், அவரது மகனுமான கணேசன் என்பவரும் வாரிசுகள். கணேசன் என்பவரை கட்சி சேர்க்காததால் இம்மனு தேவையான தரப்பினரை சேர்க்காத தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும்.

5.**தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:**

அசல் வழக்கில் 4ம் எதிர்மனுதாரரை 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டும் என்று உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு நிலைக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

**தீர்வு.**

6. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். 1 முதல் 3ம் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் ஆவர். 4ம் எதிர்மனுதாரர் புதிதாக கட்சி சேர்க்கப்பட வேண்டியவர். அசல் வழக்கானது, எல்லைநாயக்கன்பட்டி நத்தம் சர்வே எண்.344/20ல் 228.25 சதுரடியில் அமைந்துள்ள தபசில் சொத்து மனுதாரர்களுக்குப் பாத்தியப்பட்டது என விளம்புகை செய்வதன் தொடர்ச்சியாக மனுதாரர்களின் அனுபவத்தினை எதிர்மனுதாரர்கள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் மற்றும் 1ம் தபசில் சொத்தினைப் பொறுத்து 1ம் எதிர்மனுதாரரும் அவரது சகோதரர் துரைராஜும் 2ம் எதிர்மனுதாரருக்கு 23.01.2014ம் தேதி எழுதிக் கொடுத்துள்ள முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.192/2014 மற்றும் 2ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்துள்ள கிரைய ஆவண எண்.2591/2020 ஆகியவைகள் செல்லாது மற்றும் இல்லா நிலையது என்று



HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.06.11 19:02:12 +0530

விளம்புகை செய்யக் கோரியும் மனுதாரர்களால் 1 முதல் 3ம் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. அசல் வழக்கில் கடந்த 17.09.2021ம் தேதி எழுவினாக்கள் வனையப்பட்டு விசாரணைக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டிருந்த நிலையில் ஆணையர் அறிக்கைக்காக இடைநிலை மனு எண்.2/21 கடந்த 03.09.2025 வரையில் நிலுவையில் இருந்ததாலும், வழக்கிடைக் காலத்தில் 1ம் மனுதாரர் இறந்துவிட்டதாலும் விசாரணை தொடங்கப்படாமல் நிலுவையில் இருந்து வந்தது. இந்நிலையில், 4ம் மனுதாரர் 06.10.2025ம் தேதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட நிலையில் 30.10.2025ம் தேதி வா.சா.ஆ.6, 7 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு 28.01.2026ம் தேதி வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

8. இதனையடுத்து 11.02.2026ம் தேதி பாலசுந்தரம் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு 16.02.2026ம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுதாரர்கள் தரப்பில் மேற்கொண்டு சாட்சியம் அளிப்பதற்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டும் என்று உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரரும் அவரது சகோதரருமான இறந்து போன துரைராஜும் சேர்ந்து 2ம் எதிர்மனுதாரருக்கு 23.01.2014ம் தேதி முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தபசில் சொத்தினையும் சேர்த்து ஆவண எண்.192/2014 எழுதிக் கொடுத்துள்ளனர்.

9.மேற்படி ஆவணம் இல்லாது மற்றும் செல்லா நிலையது என்று பரிகாரம் கோரப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தினை எழுதிக் கொடுத்த நபர்களில் 1ம் எதிர்மனுதாரர் ஏற்கனவே அசல் வழக்கில் தரப்பினராக உள்ளார். மற்றொருவரான துரைராஜ் இறந்துவிட்ட நிலையில் அவரது மனைவியான 4ம் எதிர்மனுதாரரை கட்சி சேர்க்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4ம் எதிர்மனுதாரர் இறந்து போன துரைராஜின் மனைவி என்பதை எதிர்மனுதாரர்கள் மறுக்கவில்லை.



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.11 19:02:15 +0530

மாறாக, துரைராஜு–க்கு கணேசன் என்ற மகன் இருப்பதாகவும், அவரை கட்சி சேர்க்காததால் இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் எதிருரையில் சொல்லியுள்ளனர். ஆனால், மேற்படி கணேசன் பற்றிய வேறு எந்த சங்கதியும் சொல்லவில்லை.

10.4 ம் எதிர்மனுதாரரின் கணவர் தரப்பினராக உள்ள கிரைய ஆவணத்தினை இல்லாது மற்றும் செல்லா நிலையது என்று விளம்புகைப் பரிகாரம் கோரியுள்ள நிலையில் அவரது வாரிசான 4 ம் எதிர்மனுதாரர் தாவா வழக்கினைத் தீர்மானிக்க தேவையான தரப்பினர் ஆவார். இறந்து போன துரைராஜுன் மகன் கணேசன் என்பவர் உள்ளார் என்று எதிர் உரையில் தெரிவித்த பிறகும் மனுதாரர்கள் மேற்படி கணேசனை கட்சி சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் அனைத்து வாரிசுகளையும் கட்சி சேர்க்காமல் வழக்கு பாதிக்கப்படின் அதன் இழப்பினை மனுதாரர்கள் எதிர்கொள்ள தயாராக உள்ளனர் என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

11. இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. துரைராஜ் ஏற்கனவே அவருக்குள்ள உரிமையினை கிரையம் மூலம் கொடுத்துவிட்டார். துரைராஜுடமிருந்து கிரையம் வாங்கிய 2 ம் எதிர்மனுதார் மற்றும் 2 ம் எதிர்மனுதாரரிடமிருந்து கிரையம் வாங்கிய 3 ம் எதிர்மனுதார் ஆகியோர் ஏற்கனவே வழக்கறிஞர் மூலம் வழக்கு நடத்தி வருகின்றனர். இந்நிலையில், துரைராஜுக்கு தபசில் சொத்தில் இருந்த உரிமை குறித்து தீர்மானிக்க போதுமான அளவில் அவரது மனைவி பிரதிநிதிப்படுத்தினாலே போதுமானதாகும் என்று இந்நீதிமன்றம் கருதுவதால் காலதாமதாமதமாக தாக்கல் செய்துள்ள இம்மனுவினை 2, 3 ம் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/– செலவுத் தொகை அளிக்க உத்தரவிட்டு அனுமதிக்காலம் என்று தீர்மானிக்கிறது.

**12. முடிவாக,**

**இம்மனு 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/– செலவுத் தொகை அளித்து அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.11 19:02:18 +0530

சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11–ஆம் நாள் என்னால் இவ்வவையறியப் பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.11 19:02:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் – இல்லை –

மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் – இல்லை –

எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் –இல்லை–

எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் – இல்லை –

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.11 19:02:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.